★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 23 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 278 | November 23,Monday, 2020 | 24பக்கங்கள் | 30/-

வரவு செலவு திட்டம் 2021

## குழுநிலை விவாதம் இன்று முதல் ஆரம்பம்

2021 வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இன்று முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.


நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த 17 ஆம் திகதி 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் நேற்று முன்தினம் வரையில்

06



ராமாஞ்ஞ மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய நாபான பேமசிறி தேரரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேரருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய போது...

## ராமாஞ்ஞ மகா நிக்காயவின் புதிய மகாநாயக்கராக விமல தேரர் நியமனம்



ராமாஞ்ஞ மகா நிக்காயவின் புதிய மகாநாயக்கராக மகுலேவே விமல தேரர் நியமிக்கப் பட்டுள்ளார். பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இராமாஞ்ஞ மகா நிக்காயவின் செயற்குழு சங்க சபை ஒன்று கூடியது.

இராமாஞ்ஞ மகா நிக்காயவின் மகாநாயக்கரான நாபன்னே பேமசிறி தேரர் காலமானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மகுலேவே

06



ராமாஞ்ஞ மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய நாபான பேமசிறி தேரரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய போது...




## கொரோனா; மே... கொத்தணிகள் உரு...

அபாய அறிவிப்புடன் அவதானமாக இரு...

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேலும் கொரோனா வைரஸ் கொத்தணிகள் உருவாகும் அபாய நிலை காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர இது தொடர்பில் தெரிவிக்கையில்;

நாடளாவிய ரீதியில் மேலும் கொத்தணிகள் உருவாகாமல் தடுப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நிறுவனத்தில் ஒருவரோ அல்லது ஒரு சிலரோ வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் நிலையில் அந்த நிறுவனத்திலுள்ள அனைவருக்கும் அது பரவுவதை காணமுடிகின்றது.

இந்த நிலை, மேலும் சில கொத்தணிகள் உருவாகும் அபாய நிலையை தோற்றுவித்துள்ளது. அதன்படி, பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலைகள் மற்றும் கடற்படையினருக்குள்ளும் இவ்வாறான கொத்தணிகள் உருவாகலாம்.



அதேவேளை பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக நாட்டில் 25 இரசாயன கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 14 இரசாயன கூடங்கள் அரசாங்க மருத்துவமனைகளிலும் சுகாதார அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களிலும் செயற்படுகின்றன.

மேலும் 02 இரசாயன கூடங்கள் கொத்தலாவல பாதுகாப்பு பீடத்திலும் கொத்தலாவல இராணுவ ஆஸ்பத்திரியிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

மற்றும் நான்கு பல்கலைக்கழகங்களிலும் பிசிஆர்

06

...காதார வழிகாட்டல்களுடன் இன்று முதல்

## ...ம் தவணைக்காக ...லைகள் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணம் உள்ளிட்ட தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள பிரதேச பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பாடசாலைகளும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று(23) திறக்கப்படுமென கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் சி. கபில பெரேரா தெரிவித்தார்

இன்றைய தினம் ஆறாம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கே மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்ட அவர்,சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### மேல் மாகாணம் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் பகுதிகளுக்கு இல்லை



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வரும் நிலையில், பாடசாலைகளை தொடர்ந்தும் மூட முடியாதென்றும் மாணவர்களின் எதிர்காலம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க ஏனைய வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார தரப்பினருடன் கலந்துரையாடி

06

கொரோனா வைரஸால் உயிரிழப்போரை

## தகனம் செய்வதே ஒரேயொரு சாத்தியமான சிறப்பு வழிமுறை

அரசு நியமித்த நிபுணர் குழு தெரிவிப்பு

கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதே ஒரேயொரு சாத்தியமான வழி என அரசாங்கம் நியமித்துள்ள நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.



கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது சாத்தியமா என்பதை ஆராய்வதற்காக அரசாங்கம் நியமித்த குழு இது குறித்து ஆராய்ந்துள்ளது. அரசாங்கம் நியமித்த குழுவினர் இது குறித்து ஆராய்ந்துள்ளனர்.

06

## அலரி மாளிகை மூடப்பட்டது எனும் செய்தி உண்மைக்கு புறம்பானது

ஊழியர் எவருக்கும் தொற்று இல்லை என அறிவிப்பு

கொவிட்19 தொற்று நிலைமை காரணமாக அலரி மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தேசிய நாளிதழொன்றில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும்.



பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் பணியாற்றும் எந்தவொரு ஊழியரும் கொவிட்19 தொற்றுக்கு உள்ளாகவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

கொவிட்19 நிலைமைக்கு மத்தியில் அரசாங்கம் மற்றும் சுகாதார பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பிரதமர் அலுவலகம்

06

யாழ். நீதிமன்றில் யாழ். OIC தெரிவித்த கருத்து;

## தமிழரின் உணவு பழக்கவழக்கத்தை இழிவுபடுத்தியமைக்கு அங்கஜன் கண்டனம்

தமிழ் மக்களின் உணவு பழக்கவழக்கத்தை இழிவுபடுத்தும் முகமாக யாழ். நீதவான் நீதிமன்றில் கருத்து தெரிவித்த யாழ்.தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ கருத்தை நான் வன்மையாக கண்டிக்கிறேன் என பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.



இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கடந்த வெள்ளிக்கிழமை, யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால், கடந்த காலங்களில் இடம்

06

## சில பகுதிகளில் இன்று தனிமைப்படுத்தல் நீக்கம்

## சபாநாயகர் தலைமையில் கூடும் பாராளுமன்ற பேரவை

## காடழிப்பு தொடர்பான தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வேன்

## சிவாஜியை கடித்த பாம்பு இறந்தது

ஆபத்தான கட்டத்தை தாண்டினார்